**செ.கு.எண் :** 040 **நாள் :** 22.07.2023

**மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் இன்று (22.07.2023) தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

இன்றைய அமைச்சரவை கூட்டத்தில் மிக முக்கியமான ஒரு முடிவினை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் இன்றைக்கு எட்டப்பட்டிருக்கிறது. நீங்கள் அனைவரும் அறிவீர்கள். தமிழ்நாடு பல்வேறு சமூக, பாதுகாப்புத் திட்டங்களின் வாயிலாக ஏழை எளிய மக்களுக்கு தொடர்ந்து நல்வாய்ப்புகளை, உதவிகளை வழங்க கூடிய ஒரு மாநிலமாக தொடர்ந்திருக்கிறது. முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் வாயிலாக, வழங்கப்படக்கூடிய அந்த ஓய்வு ஊதியங்கள், இப்போது வழங்கக்கூடிய 1000/- ரூபாயிலிருந்து 1200/- ரூபாயாக உயர்த்தி வழங்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் நடைபெற்றிருக்கக்கூடிய இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியினை நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாக தமிழ்நாட்டிலே நான் குறிப்பிட்டது போல, பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்கள் நடைமுறையில் இருக்கிறது. இந்திராகாந்தி தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம், இந்திராகாந்தி கைம்பெண்கள் ஓய்வூதியத் திட்டம், மாற்றுத்திறனாளிகள்

ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்றோர் ஓய்வூதிய திட்டம், கணவனால் கைவிடப்பட்டிருக்கக்கூடிய ஓய்வூதியத் திட்டம், 50 வயதிற்கு மிகாமல் திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம், இலங்கையிலிருந்து வந்திருக்கக்கூடிய மக்களுக்கான ஓய்வூதியத் திட்டம் என்று பல்வேறு திட்டங்கள் வந்திருக்கிறது. இந்த ஓய்வூதியத் திட்டங்களுடைய வரலாற்றை நாம் சற்று பின்னோக்கிப் பார்த்தோம் என்று சொன்னால், 1962-ஆம் ஆண்டில்தான் முதன் முறையாக இந்த திட்டங்கள் தமிழ்நாட்டில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. அன்றைக்கு மாதத்திற்கு ரூபாய் 20/- அன்றைய சூழ்நிலையில் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு இந்தத் திட்டங்கள் துவங்கி வைக்கப்பட்டிருக்கிறது. 1962-ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரை பல்வேறு காலக் கட்டங்களில் இந்த ஓய்வூதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது ரூ.1000/- மாத ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இதில் மாற்றுத் திறனாளிகளுக்கான ஓய்வூதியம், கடந்த ஜனவரி மாதம் 1-ஆம் தேதி முதல் 1,000/- ரூபாயாக வழங்கப்பட்டு வந்த அந்த மாற்று திறனாளிகளுக்கான ஓய்வூதியம் 1,500/- ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருவதையும் நீங்கள் அறிவீர்கள். இது தவிர, முதியோர் உதவி பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பணியாற்றக்கூடியவர்களுக்கும் ஓய்வூதியம் நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இது ஒட்டுமொத்தமாக, எல்லா சமூக பாதுகாப்பு திட்டங்களிலிருந்து நீங்கள் பார்த்தீர்கள் என்றால், ஏறத்தாழ 30 இலட்சத்து 55 ஆயிரத்து 857 பயனாளிகள் இந்த மாதாந்திர ஓய்வூதியங்களை பெற்று வருகிறார்கள். ஆகவே, இவர்களுக்கு

உதவி செய்யக்கூடிய வகையில் தான் இப்போது இந்த 1000/- ரூபாயிலிருந்து 1,200/- ரூபாயாக நாம் இன்றைய அமைச்சரவை கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது தவிர, ஏற்கனவே ஓய்வூதியம் வேண்டும் என்றும் அதற்கான விண்ணப்பங்களை கொடுத்து, காத்திருப்போர் பட்டியலில் தற்போது 74,073 பேர் இருக்கிறார்கள். அவர்களில் தகுதியானவர்களுக்கும் உடனடியாக ஓய்வூதியம் வழங்குவதற்கும் இன்றைய அமைச்சரவை கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி அந்த ஓய்வூதியம், நான் ஏற்கனவே சொல்லியிருக்கக்கூடிய 30 இலட்சத்து 55 ஆயிரத்து 857 பயனாளிகள், இப்போது காத்திருப்போர் பட்டியலில் இருக்கக்கூடிய 74,073 பேர் பயனாளிகள், இவர்களில் தகுதியானவர்களுக்கு எத்தனை பேர் என்பதையெல்லாம் பார்த்தோம் என்றால், ஓர் ஆண்டுக்கு 845.91 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் அரசுக்கு ஏற்படும். இந்த உயர்த்தப்பட்ட ஓய்வூதியமானது, பல்வேறு துறைகளின் மூலமாக இருக்கக்கூடிய பயனாளிகளுக்கு இது சென்று சேரும். குறிப்பாக, கைத்தறித் துறையின் மூலமாக இருக்கக்கூடிய திட்டங்களில் பதிவு செய்திருக்கக்கூடியவர்கள், தொழிலாளர் நலத் துறையின் கீழ் இயங்கக்கூடிய பல்வேறு வாரியங்கள் ஏறத்தாழ 18 அமைப்புசாரா வாரியத்தில் உறுப்பினராக இருக்கக்கூடிய பயனாளிகளுக்கும் நான் இப்போது தெரிவித்திருக்கக்கூடிய இந்த உயர்த்தப்பட்ட ஊதியம் 1000/- ரூபாயிலிருந்து 1200/- ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கக்கூடிய இந்த ஓய்வூதியம் அவர்களுக்கும் அது

வழங்கப்படும். தொழிலாளர் நல வாரியங்களில் இருக்கக்கூடிய ஏறத்தாழ 1.34 இலட்சம் பயனாளிகள் இதில் பயன்பெறுவார்கள். அதேபோல, கட்டுமான தொழிலாளர்கள், அதாவது கட்டிடத் தொழிலாளர் வாரியத்தில் இருக்கக்கூடியவர்களுக்கும் இதில் பயன் ஏற்படும் என்பதையும், இது ஒரு மிக முக்கியமான ஒரு முடிவினை இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் நாம் மேற்கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மிக முக்கியமான அடுத்த அறிவிப்பாக, ஏற்கனவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய, ‘‘கலைஞர் மகளிர் உரிமை திட்டம்’’, அதற்கான முகாம்கள் சென்னையிலே நாளை துவங்கவிருக்கிறது. மற்ற இடங்களில் எல்லாம் திங்கள் கிழமை முதல் இருந்து அந்த முகாம்கள் துவங்கவிருக்கிறது. இந்த முகாம்கள் ஏறத்தாழ மூன்று கட்டங்களாக நடத்தப்படவிருக்கிறது. இவைகள் ஆங்காங்கே இருக்கக்கூடிய நியாய விலைக்கடைகள் ஒரு அலகாக (Unit) வைத்துக்கொண்டு முதல் கட்டமாக இருக்கக்கூடிய இந்த முகாம்களில் ஏறத்தாழ 21,031 முகாம்கள், இரண்டாம் கட்டமாக 14,894 ஒட்டுமொத்தமாக 35,925 முகாம்கள் ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள்ளாக மூன்று கட்டமாக நடக்கவிருக்கிறது. இந்த முகாம்களில் தனியாக எல்லோருக்கும் டோக்கன் வழங்கி, விண்ணப்பப்படிவங்கள் வழங்கக்கூடிய அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 50 இலட்சம் பேர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

தொடர்ந்து அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது. இந்த முகாம்களையும் மிகவும் விரிவான வகையில் எந்த குழப்பமும் இல்லாத வகையில், சிறந்த முறையில் ஒவ்வொரு முகாம்களையும் நடத்துவதற்கு முகாம் அலுவலர்கள், இன்று பல அலுவலர்களையும், தன்னார்வலர்களையும் நியமித்து இந்தப் பணிகள் மிக சிறப்பாக செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி:** 1000/- ரூபாயிலிருந்து 1200/- ரூபாயாக உயர்த்தி வழங்கும் திட்டம் எப்போது முதல் வழங்கப்படும்?

**மாண்புமிகு அமைச்சரின் பதில்:** இன்றைக்கு முடிவெடுத்துவிட்டோம், ஜுலை மாதம் முடிந்தவுடன் வருகிற ஆகஸ்ட் மாதத்திலிருந்து உடனடியாக வழங்கப்படும்.

**கேள்வி:** கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை தரக்கூடிய சூழ்நிலையில் உயர்த்தப்பட்டிருக்கிறது, இது அவர்களுக்கு இல்லை என்பதற்காக அவர்களுக்கு extra-வாக தந்திருக்கிறீர்களா?

**மாண்புமிகு அமைச்சரின் பதில்:** அது எல்லாம் கிடையாது. ஏற்கனவே, நாங்கள் சொல்லியிருப்பது தானே. அதனால் என்ன? நாங்கள் உயர்த்திதானே வழங்குகிறோம். உயர்த்தி வழங்கப்பட்டதையும் நீங்கள் சொல்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது. குறைத்து வழங்கவில்லை.

**கேள்வி:** 30 இலட்சம் பயனாளிகள் இதனால் பயனடையப் போகிறார்கள். அவர்களுக்கு ஆகஸ்ட் மாதத்திலிருந்து வரப் போகிறதா?

**மாண்புமிகு அமைச்சரின் பதில்:** வந்துவிடும்.

**கேள்வி:** 1200/- ரூபாய் ஓய்வூதியத் திட்டம் Central State......

**நிதித் துறைச் செயலாளரின் பதில் :** ஒன்றிய அரசு, 80 வயதிற்கு மேற்பட்ட நபர்களுக்கு 300 ரூபாய் தருகிறார்கள். மீதமுள்ளவர்களுக்கு 200 ரூபாய் தருகிறார்கள். மீதியை மாநில அரசு கொடுக்கிறது.

**கேள்வி:** திமுக தேர்தல் அறிக்கையில், முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் 1000 ரூபாயிலிருந்து 1500-ஆக உயர்த்தப்படும் என்று சொல்லியிருந்தீர்கள். இப்போது 1200/- ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது பற்றி...

**மாண்புமிகு அமைச்சரின் பதில்:** உயர்த்தப்படும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம். 1962-லிருந்து 20 ரூபாயிலிருந்து படிப்படியாக உயர்த்தப்பட்டுக் கொண்டு வருகிறது. ரூ.1000-லிருந்து ரூ.1200-ஆக வருகிறது. உங்களுடைய எண்ணமும் வருங்காலத்தில் பலிக்கவேண்டும் என்று நானும் வேண்டிக்கொள்கிறேன்.

**கேள்வி** : மகளிர் உதவித் தொகை துவங்கப்பட்டிருக்கிறது. அதற்கான பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான விதிகள் தளர்த்தப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா? ஏனென்றால், 13 வழிகள்

நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதன் அளவுகோலை (criteria) நிறைய பேர்கள் நிரப்பாததனால், பயனாளிகளுடைய எண்ணிக்கை குறைகிறதே அதைப்பற்றி....

**மாண்புமிகு அமைச்சரின் பதில்:** பயனாளிகளின் எண்ணிக்கை குறைய வேண்டிய அவசியம் இருக்காது. மாண்புமிகு முதலமைச்சர் மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறார். தகுதி வாய்ந்தவர்கள் ஒரு பயனாளி கூட இந்தத் திட்டத்தின் கீழ் விடுபட்டு போய்விடக்கூடாது என்பதில் மாண்புமிகு முதலமைச்சர் மிகத் தெளிவாக இருக்கிறார். அதனால் பயனாளிகளுடைய எண்ணிக்கை குறைகிறது என்கின்ற கேள்வியே கிடையாது. நம்மைப் பொறுத்தவரையில் தகுதி வாய்ந்த பயனாளிகள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இது வழங்கப்படும்.

**கேள்வி** : Foxconn போன்ற தொழில் நிறுவனங்களுக்கு ஏதேனும் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறதா? அது தொடர்பாக அமைச்சரவையில் ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு அமைச்சரின் பதில்:** அமைச்சரவையில் எப்போதும் போல இருக்கக்கூடிய சில திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. அது குறித்து தனியாக தெரிவிக்கப்படும்.

**கேள்வி** : மணிப்பூர் தற்போது பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. அது குறித்து விவாதிக்கப்பட்டதா?

**மாண்புமிகு அமைச்சரின் பதில்:** மணிப்பூரில் எப்போதும் இல்லாத அளவிற்கு மிகப் பெரிய அளவில் இன்றைக்கு உலகளாவிய கவனத்தைப் பெற்றிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் மணிப்பூர் விஷயத்தில் தன்னுடைய தெளிவான கருத்தைத் தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கடும் கண்டனத்தை பதிவு செய்திருக்கிறார்கள். மிகக் கடுமையான எதிர்வினை ஆற்றியிருக்கிறோம். நாடாளுமன்றத்தில், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இது குறித்து தீர்மானங்களை கொண்டு வருவதற்கு, அதற்கான விவாதங்கள் எழுப்புவதற்கு அவர்கள் Notice கொடுத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மகளிர் அணியினுடைய சார்பில் இன்றைக்கு சென்னையில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது. நாளை பல்வேறு இடங்களில், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும், அதற்கான ஏற்பாடுகள் திங்கள் கிழமை அன்று செய்வதற்கு முழு ஏற்பாடுகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் நான் ஒன்றை மட்டும் கேட்கிறேன். ஒரு மிகப் பெரிய சம்பவம் நடந்திருக்கிறது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியே அதை கண்டித்திருக்கிறார். நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு கட்சியில் இருக்கக்கூடிய தலைவர்கள், பெண்களுடைய பாதுகாப்பில் உள்ளபடியே அக்கறை இருக்கக்கூடிய ஒவ்வொருவரும் இதை கண்டித்திருக்கிறபோது, நான் கேட்க விரும்புவது, தமிழ்நாட்டில் பிரதான கட்சியாக இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை அது

குறித்து வாயே திறக்காமல் மௌனமாக இருப்பது ஏன்? மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் நாங்கள் யாருக்கும் அடிமையாக இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், மணிப்பூர் விவகாரத்தில் இதுவரை அவர்களிடத்திலிருந்து ஒரு வார்த்தை கூட வராதது என்பதைப் பார்க்கிறபோது அதிமுக-வினுடைய இந்த இரட்டை வேடம் இன்றைக்கு அம்பலப்பட்டிருக்கிறது.

**கேள்வி** : மணிப்பூர் விவகாரத்தைப் பொறுத்தவரைக்கும், பாஜக-வில் இருக்கக்கூடியவர்களும் மௌனம் சாதிக்கக்கூடிய ஒரு அரசியல் நிலைப்பாட்டாக இருக்கிறது.

**மாண்புமிகு அமைச்சரின் பதில்:** இது ஒரு அரசியலுக்கு மட்டும் கிடையாது. இது ஒரு சமூகத்தின் தலைகுனிவு. மாதராய் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டுமம்மா என்று சொல்லிவிட்டு, அவர்களுடைய பாதுகாப்பிற்கும், உயிருக்கும் எதுவும் இல்லாமல், இவ்வளவு ஒரு மிக மோசமான சூழ்நிலையை மணிப்பூர், இந்தியாவில் இருக்கக்கூடிய ஒரு மாநிலம், அந்த மாநிலத்தில், ஒரு பகுதியில் இருக்கக்கூடிய பெண்களுக்கு இவ்வளவு பெரிய வன்கொடுமை நடந்திருக்கிறது. இதைக் கண்டிப்பதற்குக்கூட எதிர்வராத சக்திகள் இன்னும் அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் வெட்கக்கேடு.

**கேள்வி:** தமிழர்கள் அங்கே இருப்பதாக ஏற்கனவே புள்ளிவிபரங்கள் சொல்கிறது. அவர்களுடைய பாதுகாப்பிற்கு, நம்மிடமிருந்து தலைமைச் செயலாளர் அல்லது அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதி உறுதிப்படுத்தபடுமா?

**மாண்புமிகு அமைச்சரின் பதில்:** தேவைப்படக்கூடிய நடவடிக்கையில் உறுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுப்பார்கள்.

**கேள்வி:** Sundry deficit அதிகரிக்குமா?

**மாண்புமிகு அமைச்சரின் பதில்:** இல்லை. ஏற்கனவே இருக்கின்ற Revenue deficit நாம் குறைத்திருக்கிறோம்.

**கேள்வி:** 30000 கோடி வரை குறைத்திருக்கிறோம். மறுபடியும் இந்த additional expenses 12000 கோடி பற்றி……

**மாண்புமிகு அமைச்சரின் பதில்:** கவலைப்பட வேண்டாம். Financial prudent என்று ஒன்று இருக்கிறதா? இல்லையா? அதனால் Fiscal Management-ஐ பொறுத்தமட்டில், நிச்சயமாக, நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய எந்தவிதமான குறைபாடுகள் இல்லாத வகையில், நம்முடைய நிதிநிலைமை மிகச் சிறப்பாக மேம்படுத்தி செல்வதற்காக திறமையான அலுவலர்களை, திறமையான ஒரு கட்டமைப்பை தமிழ்நாடு பெற்றிருக்கிறது.

**கேள்வி:** அரசு ஊழியர்களை பொறுத்தவரையில், பழைய பென்ஷன் திட்டத்தில் அரசு முறையாக தனது கருத்துக்களை கேட்டு ஒரு நிலைபாடு வைத்திருக்கிறது. என்ன நிலைபாட்டில் இருக்கிறது?

**மாண்புமிகு அமைச்சரின் பதில்:** ஏற்கனவே, ஒன்றிய அரசு திரு. சோமநாதன் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டியை போட்டிருக்கிறார்கள். ஆந்திர

மாநிலத்தில் அவர்கள் சில முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். தமிழ்நாடு, இவற்றையெல்லாம் கூர்ந்து ஆய்வு செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இவற்றையெல்லாம் கூர்ந்து ஆய்வு செய்து, எது நமக்கு பொறுத்தமாக இருக்கும் என்பதையெல்லாம் நாம் கலந்தாலோசித்து, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்று பேசி தான் இதற்கு ஒரு முடிவு சொல்லமுடியும்.

- - - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in